## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



காசிபாளையம் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



க.பரமத்தி வடக்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



திண்டுக்கல் பகுதி-2,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



சரவணம்பட்டி பகுதி,
கோவை வடக்கு மாவட்டம்.



அண்ணா நகர் பகுதி,
கோவை மாநகர் மாவட்டம்.



சூலூர் தெற்கு ஒன்றியம்,
கோவை தெற்கு மாவட்டம்.



கோட்டூர் தெற்கு ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.



செந்துறை வடக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



திருவட்டார் தெற்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



களம்பூர் பேரூர்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



செங்கம் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.

---

### மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்

# கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் இல்ல மணவிழா!

**அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை! அமைச்சர்கள் - ஆர்.காந்தி - கோவி.செழியன் - டி.மதியழகன் எம்.எல்.ஏ. - காசிமுத்துமாணிக்கம் - முன்னணியினர் வாழ்த்துரை!**

கிருஷ்ணகிரி, ஆக. 14 - கிருஷ்ணகிரி மாவட்டம் - மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் பி.டி. அன்பரசன் - ஏ.மேகலா ஆகியோரின் புதல்வர் ஏ.எம். உதயராஜ்க்கும், கிருஷ்ணகிரி மாவட்டம் - மலத்தம்பட்டி எம்.மணிவேல் - எம். சுலோச்சனா ஆகியோரின் புதல்வி எம்.பவித்ராவிற்கும் மணவிழா 27.08.2025 - புதன்கிழமை காலை 5 மணியளவில் கிருஷ்ணகிரி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ தேவராஜ் மஹாலில் நடைபெறு கிறது.

இம்மணவிழாவில் கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் ஆர்.டி.அன்பரசன் வரவேற்புரையாற்றுகிறார்.

மணவிழாவிற்கு அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இம்மணவிழாவில் அமைச்சர்கள் ஆர்.காந்தி, கோவி.செழியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர். என்.பாரதி, அன்பகம் கலை, எஸ்.ஆஸ்டின், ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., கே.கோபிநாத் எம்.பி., பி.பழனியப்பன், ஆ.மணி எம்.பி., தளி.டி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் டி.ஏ.நாகராஜ், பி.கே.கோவிந்தசாமி. சாவித்திரி கடலரசு மூர்த்தி, எம். சந்திரன், ப.கதிரவன், வி. செந்தில், ஜெ.கே.கிருபாகரன். பி.பரிதா நவாப், பி. டி.பாலன், எ.சி.நாகராசன், எம்.சி.சித்ரா, சந்திரசேகர், கே.ஆர்.கோதண்டன், டி. சீனிவாசன், ஏ.சி.தேவகுமார், பி.எம்.முனிவேல், டி. ரமேஷ், ஆ.யுவராஜ், ஒய். சின்னசாமி, வி.புஷ்பா, சர்வேஸ், தா.சுகுமாரன், ஆர். வீரா ரெட்டி, கி.எல்லோராமணி, பி.கிரிஷ், எம்.ஜெயராமன், எம்.சீனிவாசன், ஜி.அப்துல் கலாம், அ.தனலட்சுமி, அருணா பூசன்குமார், சி.ஆனந்தையா,

டி.செங்குட்டுவன், இ.ஜி. சுகவனம், காஞ்சனா கமலநாதன், எம்.வி.வெற்றிச் செல்வன், டேம் டி.வெங்கடேசன், எஸ்.மாலதி நாராயணசாமி, பி.எஸ்.சீனிவாசன், டி.எம்.அரியப்பன், பி. கிருஷ்ணன், எஸ்.பி. இசை, வி.விஜயகுமார், வெ.ஞானசேகரன் உள்ளிட்ட கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஏ.எம்.சூரியன் நன்றி கூறுகிறார்.



நீலகிரி மாவட்டம் குன்னூர், சட்டமன்றத் தொகுதி குன்னூர் நகராட்சிக்குட்பட்ட புனித அந்தோணியார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆடிட்டோரியத்தில், நடைபெற்ற, "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடன் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமின் சிறப்பம்சம் பற்றி கலந்துரையாடினார். இந்நிகழ்வில் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், நகர மன்ற உறுப்பினர்கள் ஜாகிர் உசேன், வசந்தி, குமரேசன், உமா, சித்ரா உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (12.08.2025) சென்னையில் 70 வயதிற்கு மேற்பட்ட வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கருப்பூர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாய விலைக் கடைக்குட்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி முன்னிலையில் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்து, தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே. எபினேசர், இரா. மூர்த்தி, ஆர்.டி. சேகர், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், கே.பி. சங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் எஸ். சிவராசு, கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப. அம்ரித், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்து அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே. எபினேசர், ஆர்.டி.சேகர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

### வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று

# ரேசன் பொருட்களை விநியோகிக்கும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்”!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 14 -

**தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்“ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, முதலமைச்சரின் தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய நோக்கின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” செயல்படுத்தப்படுகிறது.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்திறனாளிகளும், என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

> **“இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்திறனாளிகளும், என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.”**

இத்திட்டத்தின் மூலம், மின்னணு எடைத்தராசு, ePoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்கும் இத்திட்டத்திற்கு அரசுக்கு 35.92 கோடி ரூபாய் செலவாகும். மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளிடம் உரையாடினார்.

அப்போது முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், தங்களுக்கு வீடு தேடி வந்து ரேசன் பொருட்களை வழங்குவதால், மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது என்றும், குடும்பத்தில் ஒருவராக தங்களது சிரமங்களை அறிந்து இத்திட்டத்தை செயல்படுத்தியதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்“ சென்னையில் தொடங்கி வைத்த நிகழ்ச்சியில், மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே. எபினேசர், இரா.மூர்த்தி, ஆர்.டி. சேகர், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், கே.பி.சங்கர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அ.ஜான் லூயிஸ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் எஸ்.சிவராசு, கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப. அம்ரித், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் தீர்வு ஏற்பட்டவுடன் -

# தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் - சுமூகமான முடிவுக்கு வரும்!

## திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

*திருச்சி, ஆக. 14-*

*நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் தீர்வு ஏற்பட்டவுடன் இன்று அல்லது நாளைக்குள் துப்புரவு பணியாளர்களின் போராட்டம் சுமூகமான முடிவுக்கு வரும் என்றும், அவர்களுக்கு செய்து கொடுக்க முடிந்ததை செய்து கொடுக்க வேண்டுமென முதலமைச்சர் கூறியுள்ளார். அவர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் எனவும் திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என் நேரு பேட்டியளிக்கையில் தெரிவித்தார்.*

*70 வயதை கடந்த முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவன் திட்டத்தை திருச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.*

*உறையூர் பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் அந்தத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்த அமைச்சர் கே.என்.நேரு அப்பகுதியில் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருட்களை வழங்கினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு,*

*முன்பெல்லாம் ரேஷன் கடைகளில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது கலைஞர் ஆட்சி காலத்தில் அது சரி செய்யப்பட்டது தற்பொழுது முதலமைச்சர் மு க ஸ்டாலின் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக்கும் திட்டத்தை தொடக்கி வைத்துள்ளார் இது மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது இந்த திட்டத்திற்காக 1128 வாகனங்கள் பயன்படுத்தப்பட உள்ளது 88 ஆயிரம் பேர் பயனடைய உள்ளனர்.*

**முதலமைச்சர் அறிவுறுத்தல்!**

*சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் துப்புரவு தொழிலாளர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம். இந்த போராட்டத்தை சுமூகமாக முடிக்க அனைத்து*



*நடவடிக்கைகளையும் முதலமைச்சர் எடுத்து வருகிறார்.*

*வட மாநில தொழிலாளர்களை துப்புரவு பணியில் ஈடுபடுத்த உள்ளதாக வரும் தகவல்கள் தவறானது.*

*துப்புரவு தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஒரே நாளில் நிறைவேற்ற முடியாது. அதற்கு கால அவகாசம் தேவை. அவர்களுக்கு தேவையானதை செய்து கொடுக்க வேண்டும் என முதலமைச்சர் கூறியுள்ளார். நிச்சயம் அது பேச்சுவார்த்தையில் முடிவெடுக்கப்படும்.*

*நான் அவர்களை சென்று சந்திக்கவில்லை எனக் கூறுவது தவறு. ஏற்கனவே நான்கு முறை போராட்டத்தில் ஈடுபட்டு வரும் துப்புரவு தொழிலாளர்களிடம் நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்தி உள்ளேன்.*

*துப்புரவு பணியாளர்களை நிரந்தரப்படுத்துவது குறித்து முதலமைச்சர் முடிவெடுப்பார் அ.தி.மு.க. ஆட்சியில் 17,000 பேரை துப்புரவுப் பணியாளர்களாக நிரந்தர பணியில் அமர்த்தினோம் என அ.தி.மு.க. அமைச்சர் கூறினார். ஆனால் அவர்கள் யாரும் துப்புரவு பணிக்குச் செல்லவில்லை*

*துப்புரவுப் பணியாளர்களுக்கு உள்ள பிரச்சனை நாடு முழுவதும் உள்ள பிரச்சினை இதில் முதலமைச்சர் உரிய முடிவு எடுப்பார்.*

*துப்புரவு தொழிலாளர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.*

*தூய்மைப் பணி பாதிக்க கூடாது என்பதற்காக ஏற்கனவே பணியில் உள்ளவர்களை தான் பயன்படுத்தி வருகிறோம். புதிதாக யாரையும் பணியில் எடுக்கவில்லை.*

*தெரு நாய்களை கட்டுப்படுத்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவு அருமையான உத்தரவு. அந்த உத்தரவு நகல் வந்த உடன் அதனை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்துவோம். மிகப்பெரிய பிரச்சினையான தெருநாய்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு எங்களுக்கு நல்ல வாய்ப்பாக உள்ளது.*

*நிதி நிலைமைக்கு ஏற்ப ஒவ்வொரு திட்டமாக நிறைவேற்றி வருகிறோம். அறிவித்த வாக்குறுதிகளை மட்டுமல்லாமல் அறிவிக்காத வாக்குறுதிகளையும் முதல்வர் நிறைவேற்றி வருகிறார். தேர்தல் வருவதால் எதிர்க்கட்சிகள் ஏதாவது குறை கூறி வருகிறார்கள்.*

**இன்று அல்லது நாளைக்குள் முடிவுக்கு வரும்!**

*தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. அதில் ஒரு தீர்வு ஏற்பட்டவுடன் இன்று அல்லது நாளைக்குள் தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் முடிவுக்கு வரும் என்றார்.*

*இந்த நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன் மாநகராட்சி மேயர் அன்பழகன் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகராட்சி ஆணையர் மதுபாலன், காஜாமலை விஜய், பகுதி செயலாளர்கள் இளங்கோ, மோகன்தாஸ் மற்றும் ஹரிஹரன் திருநாவுக்கரசு தனபால் சோழன் சம்பத் முத்து பழனி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.*

*முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ள தாயுமானவன் திட்டம் தங்களுக்கு மிகுந்த பயனுள்ள வகையில் இருக்கும் எனவும் ரேஷன் கடைக்கு தங்களால் நடந்து சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வர முடியாது, தற்போது வீடுகளுக்கே ரேஷன் பொருட்கள் தேடி வருவது சிறப்பாக உள்ளது, இதை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும், இதற்கு எங்களுடைய நன்றியை அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறோம் என பயனாளிகள் தெரிவித்தனர்.*



திருவெறும்பூர் அருகே உள்ள மேல கல்கண்டார் கோட்டை சுப்பிரமணியபுரம் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். இதில் கழக முன்னணியினர், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.